[1972 ஆகஸ்ட் 24

உடுக்குறியிட்ட வினாக்கள்

Obscene Dances

* 234 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of teen-aged girls were prosecuted for obscene dances in Madras City during January, 1972; and

(*b*) if so, the details thereof?

ஆபாச நடனங்கள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1972 ஜனவரியில் சென்னை மாநகரில் ஆபாச நடனங்கள் ஆடியதற்காக இளம் பருவப் பெண்கள் பலர் மீது வழக்குத் தொடரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) ஆபாச நடனம் ஆடியதற்காக 1972 ஜனவரித் திங்களில் பருவப் பெண்கள் பன்னிருவர் மீது மாநகர மாஜிஸ்ட்ரேட் முன்பு சென்னை மாநகரக் காவலர் வழக்குத் தொடுத்தனர். அவர்கள் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு அபராத தண்டனை விதிக்கப் பட்டனர். அவர்கள் அபராதத் தொகையைச் செலுத்தினர்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த ஆபாசம் என்பது நடனத்தில் மட்டுமல்லாமல் சினிமாத் துறையிலும் இருந்து வருகிறது. ஆபாசம் எது என்று கண்டுபிடிக்க கெய்வார் தலைமையில் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. இதுபற்றி அரசின் நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சினிமா காட்சிகளில் ஏற்படுகின்ற தவறுகளை, ஆபாசத்தைக் கண்காணிக்க மத்திய சர்க்காரின் தணிக்கை போர்டு இருக்கிறது. ஆகவே அது இந்தப் பிரச்னையில் எழவில்லை.

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு தலைவரவர்களே, தற்போது நமது மாநிலத்தில் மக்கள் அதிகமாக வசிக்கும் சில பகுதி களில் கலைவிழாக்கள் நடத்தப்படுகின்றன. அநேக கலைவிழாக்களில்

1972 ஆகஸ்ட் 24]

ஆபாச நடனங்கள் நடத்தப்படுகின்றன. கோவில் விசேஷங்களில் கூட இப்படிப்பட்ட நடனங்கள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து நாட்டில்கூட இத்தகைய ஆபாச நடனங்கள் நடைபெறுகின்றன. இவைகளைத் தடுக்க இங்கிலாந்தில் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. (அங்கத்தினர் சிரித்துக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : பேசும்போதே சிரிக்கிறீர்கள். பார்த்தால் இன்னும் என்ன செய்வீர்களோ ?

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : தலைவரவர்களே, இதைச் சொல்லும்போதே சிரிப்பு வருகிறது. ஆகவே, மக்களின் நன்மையைக் கருதி அரசு இப்படிப்பட்ட நடனங்களைத் தடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பொதுவாகக் கலைக்காட்சிகளில், பொது இடங்களில் ஆபாச நடனங்கள் நடைபெறக்கூடாது என்பதில் காவல்துறை அதிகாரிகள் தீவிரமாக இருக்கிறார்கள்.

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, பொது இடங்களில் அதாவது கற்புக்கு பங்கமில்லாமல் காண்போர் களிக்க நடனம் ஆடுவது ஆபாசமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அது சொந்த விஷயம். நான் தலையிட விரும்பவில்லை.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, பரத நாட்டியங்களிலும் ஆபாசமிருக்கிறது. அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பரத நாட்டியத்தில் ஆபாசமில்லை. பாதக நாட்டியத்தில் தான் ஆபாசம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, சென்னையில் சில இடங்களில் காபரே நடனங்கள் நடைபெறுவதாகக் கேள்விப்படுகிறேன். அதைத் தடுத்து நிறுத்த ஏதாவது முயற்சி இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேள்விப்பட்டால் போதாது. பார்த்துச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, 12 பெண்களுக்கு தண்டனை அளிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். தண்டிக்கப்பட்டவர்களே மீண்டும் நடனமாடுவதாகச் சொன்னார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு தண்டனையைக் கடுமைப்படுத்த அரசு முயலுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தண்டனையைப் பொறுத்த வரை, 15 ரூபாய், 30 ரூபாய் என்று அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. அதை நடனத்துக்கு ஏற்பாடு செய்கிறவர்களே செலுத்தி விடுகிறார்கள். ஆனால் இப்போது கண்காட்சி நடத்துகிறவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை முன் பணமாகச் செலுத்த வேண்டும். அதாவது 5,000, 10,000 என்று இருக்கலாம். அந்த நிர்ணயத் தொகையை மாவட்ட கலெக்டரிடம் முன் பணமாகச் செலுத்த வேண்டும். கண்காட்சியில் ஆபாச நடனம் நடத்தினால், அந்த முன் பணம் முழுவதும் பறிமுதல் செய்யப்படும். இப்படிப்பட்ட நிலை உருவாக மாவட்ட ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

THIRU G. VASANTHA PAI : May I know from the Hon. the Chief Minister where these teen-aged girls were prosecuted for their obscene dances in Madras City?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்ற பார்க் ஃபேர் கண்காட்சியிலும் கண்ணப்பர் திடலில் நடைபெற்ற கண்காட்சியிலும் அவர்கள் பிடிக்கப்பட்டு தண்டிக்கப் பட்டார்கள்.

Beer Factory

* 235 *Q*.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a Beer Factory is expected to be set up in Thanjavur district in the private sector; and

(*b*) if so, the details of the project including the proposed assistance by the State?

"பீர்" தயாரிக்கும் தொழிற்சாலை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தனியார் துறையின்கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் "பீர்" தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்படும் என்பது உண்மையா ?